[illegible]

[illegible]

உ

சிவமயம்.

கோமான்மியம்

என்ற

பசுக்களின் மகிமை.

இஃது

திருநெல்வேலி

சு. சங்கரநாராயண பிள்ளையால்

கோவைசெய்யப்பட்டு,

ச. சுப்பிரமணிய பிள்ளையால்

தமது

சிந்தாமணியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பாளையங்கோட்டை.

1882.

உ

சிவமயம்.

முகவுரை.

அநேகவிடங்களிற் பசுக்களையும் இடபங்களையுஞ் சிறிதும் இரக்கமின்றி வேலைவாங்கலும், அடித்தலும், கொல்லலும் பெரு வழக்கமாயிருக்கின்றன. அங்ஙனஞ் செய்வதினாலுண்டாம் பாவம் அளவற்றதாயிருக்கின்றது. அப்பாவங் காரணமாக ரௌரவாதி நரகத்திற் புகுந்து எல்லையில் துன்பத்துள் இடர்ப்படவேண்டியதா யிருக்கின்றது. ஆகையின் பசுக்களையு மிடபங்களையுமவ்வாறு நடத்துவோர்க்கு அவற்றின் மகிமை யித்துணையவென்பதைக் காட்டவேண்டுமென்னுங் கருத்துப்பற்றியே செய்யுள்நடையறியின்றுள்ளவர்க்கு மெளிதிலுபயோகமாம் பொருட்டு இஃது வசனரூபமாயெழுதப்பட்டிருக்கின்றது. இதனை யாவருமறிந்து குற்றத்தைநீக்கிக் குணத்தைக் கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

TINNEVELLY. S. S.

கோமான்மியம்.

சுத்த சாட்குண்ணிய பரம கருணாநிதியாகிய சிவபெருமானெழுந்தருளியிருக்குஞ் சிவலோகத்தின்கண்ணுள்ள திருக்கோவிலின் சந்நிதியில் தரும தேவதையாகிய இடபமும் பக்கத்தில் நந்தைமுதலிய பசுக்களுங் காத்திருக்கும். அவனியின்கட் பிறந்துழலு மற்ப வாழ்நாட்களையுடைய மக்களுயிர்க்குப் பிறவிப்பிணி நீக்கி யடைதற்கரிய பேரின்ப முத்தியை யளிக்கும்பொருட்டுச் சிவபெருமானே திருவுளங்கொண்டு அவ்விடபதேவனையும் அழகிய பசுக்களையுந் திருப்பாற்கடலினின்றுந் தோற்றுவித்துப் பூமியின்கண் நிலைபெறச்செய்தார். பசுக்கள் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனையென ஐந்து வகைப்படும். அவற்றுள் நந்தை கபிலநிறமும், பத்திரை கருநிறமும், சுரபி வெண்ணிறமும், சுசீலை புகைநிற

மும், சுமனே தாமிரசிறமுமுனட்டன. இப்பசுக்களை யவ்வ வற்றிற்குரிய பெயரினால் தியானித்துப் பூஜித்து வழிபட்டு அவை தரும் பால், தயிர், நெய், கோமயம், கோஜலம், கோரோசனை யென்னும் அறுவகைத் திரவியங்களையுஞ் சிவபெருமானுக்கு அபிஷேகம்பண்ணவேண்டும். பசுவின் கொம்புகளினடியிற் பிரமாவும் விஷ்ணுவும் விளங்கியிருப்பர். கொம்புகளி னுனியிற் கோதாவிரிமுதலியபுண்ணியதீர்த்தங்களும், இயங்கியற்பொருள் நிலையியற்பொருளனைத்துந் தங்கும். சிரசில் சிருஷ்டி திதி சம்ஹார கர்த்தராகிய சிவபெருமானும், நெற்றிநடுவில் நித்தியானந்தப் பெருவாழ்வையுடைய உமாதேவியாரும், மூக்கு நுனியில் முருகக்கடவுளும், காசியில் இந்திரன் முதலிய தேவரும் அமர்ந்திருப்பர். கண்களிரண்டினும் சூரிய சந்திரரும், கன்னமிரண்டினடுவிலும் அச்சுவினிமுதலிய தேவர்களும், பற்களில் வாயுவும், நாவில் வருணனும், மணிநகளினிடத்து இயமனும் இயக்கரும் பொருந்தி வாழ்வர். நெஞ்சிற் சரஸ்வதியும், உதட்டிற் சந்தியாதேவதைகளும், கழுத்தில் இந்திரனும், திமிலில் அருக்கதேவரும், மார்பிற் சாத்தியரும் விரும்பிவாழ்வர். கால் நான்கினும் அநிலனாகிய வாயுவும், காற்குளம்பு எட்டின் நுனியிலும் நாகரும், குளம்பினடுவிற் கந்தருவரும், குளம்பின் மேற்புறத்தில் அரம்பையரும், முழந்தாள்களில் மருத்துவரும், முதுகில் உருத்திரரும், சந்துகளில்

அஷ்ட வசுக்களும், வரைப்பரப்பிற் பிதிர்தேவதைகளும், யோனியிற் சப்தமாதாக்களும், குதத்தில் இலக்ஷுமியும் பொருந்திவாழ்வர். வாலினடியில் நாகாதிபரும், வாலு ரோமத்திற் சூரியனும், கோஜலத்தில் ஆகாயகங்கையும், கோமயத்தில் யமுனநதியும், உரோமங்களில் முனிவரும், வயிற்றிற் பூமிதேவியுந் தங்குவர். ஸ்தனத்திற் கடலனைத்தும் பொருந்தும். வயிற்றினும், இதயத்தினும், முகத்திலும், காருகபத்தியம் ஆகவனீயம் [illegible]க்கினி யாகிய மூவகையக்கினியும் முறையே பொருந்தும். [illegible] சக்கி [illegible]லும் யாகத்தொழில் முறையே பொருந்தும். அவையவங்களனைத்திலும் கற்புடைய மாதர் விளங்கியிருப்பர். இவ்வாறே பசுவினது அவயவங்களனைத்திலும் பூமியின் கணுள்ள ஆன்மாக்கள் யாவும் புகழ்ந்து தொழுகின்ற சிவபெருமானும் உமாதேவியாரும் பிரமவிஷ்ணுக்களும் இந்திரன்முதலிய தேவர்களனைவரும் இன்புறவீற்றிருக்கின்றராதலின் இப்பசுக்களைப் பசும்புல் முதலியவற்றைத் கொடுத்துப் பாதுகாப்பவர் மேற்கூறிய சிவபெருமான் முதலியோரைப் பூசிப்பதினும் பதின்மடங்கு பலன் பெறுவரென்பதற்குச் சந்தேகமென்னை! பசுக்களை மேய்க்கும்போதோடியாயினும் அடியாதும், அப்பசுக்கள் அஞ்சி நடுங்கும்படி உரத்து அதட்டாதும், பசுமையான புன்முருக்க கோலால் மெல்லென வொற்றி யொற்றியும் தெக்கெதிரி செச

சுரி யென்று மிருதுபாஷியாய் வசனித்தும் நடத்துவோர் பரங்கருணைத்தடங்கடலாகிய சிவபெருமானெழுந்தருளியிருக்குஞ் சிவலோகத்தின்கண் சிறிதுந் தடையின்றிச்சேர்வர். பசுக்களைத் தொட்டமாத்திரத்திற் பாவமனைத்துங் கெடும். பசும்புல்லைக்கொடுத்துப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கியமாத்திரத்திற் பாசவிலங்கறும். இருவினைப்பிணியுநீங்கும். பசுக்களைப் பாதுகாவாமலும் வணங்காமலுமிருக்கின்ற பாவிகள் எரிவாய்நரகத்துக் கிரையாவார்கள். பசுக்களுக்குப் பசும்புல் நீர்முதலியவற்றை யூட்டினோர் பரமபதவியையடைந்து எண்ணில்லாத காலம் அங்குள்ள போகங்களை யநுபவிப்பர். அன்றியும் இம்மையினும் பால் தயிர் நெய் முதலியனவற்றைப் பெறுவர். பசுக்களுக்குக் கொட்டில் ஆகமப்படி அமைக்கவேண்டும். கொட்டிலைச் செங்கல் முதலியவற்றாற் கட்டுவித்துக் கீழைத்திக்கில் வாயில்விட்டுத் துர்க்கைகோவிலும், தென்திசையிற் பால், தயிர், நெய், கோமயம் கோஜலமாகிய ஐவகைப்பொருளையும் வைத்தற்கு ஓர் வசதிடமும், மேலைத்திக்கில் விக்கினேசுரர் ஆலயமும் வடதிசையில் இடபதேவசாலயமுஞ் சந்திராலயமும் அமைக்கவேண்டும். வாயிலி னிருபுறத்தும் நந்திமஹாகாளராகிய துவாரபால ரிருவரையும் பிரதிஷ்டைபண்ணவேண்டும். கொட்டிலின் தளத்தை ஆற்றுமண் ஓடைமண் புற்றுமண் வில்வத்தடிமண் அரசடிமண் ஆகிய இவ்வைவகைமண்ணை

டு பஞ்சகௌவியத்திற் சேர்த்துப் பூசிச் செவ்வைபடுத்தல் வேண்டும். பிரமா விஷ்ணு உருத்திரன் ஆகிய மூவருக்குந் தனித்தனியே ஆலயங்களமைத்துப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்யவேண்டும். இளங்கன்றுகளுக்கும் முதிர்ந்த கன்றுகளுக்கும், நோயுற்ற கன்றுகளுக்கும் பிரத்தியேகமாய் வெவ்வேறிடங்களமைத்தல்வேண்டும். நோயுற்ற கன்றுகளுக்கு மருந்துகொடுத்துச் சுகப்படுத்தல்வேண்டும். பசுக் கொட்டிலிற் கொசுக்கள் புகாவண்ணம் கோமயமுதலியவற்றைநாடோறும் நீக்கல்வேண்டும். பசுக்களைச் சாலையிற்புகுவிக்குங்கால் சுவத்தி யென்னுஞ் சொல்லைச் சொல்லிச் சிறிதும் வருத்தமின்றி மெல்லமெல்லப் புகுவித்துப் பசும்புல்லைத்தின்னுவித்தல்வேண்டும். பசுக்கள் சயனித்தற்கு வள்ளிக்கொடியினாலே பாயொன்று முடித்துவைக்கவேண்டும். பசுக்களை அஷ்டமிதோறும் அபிடேகித்து, புஷ்பமாலைசூட்டித் தூபதீபங்காட்டி, அன்னமுஞ்சலமும்மூட்டி அடிதொழவேண்டும். பசுக்கள் வசிக்க ஆகமப்படி கொட்டிலமைத்தோர் அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பாகிய அகிலலோகநாயக னெழுந்தருளியிருக்குஞ் சிவலோகத்தையடைந்து சூரியசந்திரருள்ளவளவும் அங்குள்ள போகங்களை யநுபவித்துப் பின்னர் இந்திரன் முதலிய இமையவர் பதங்களை யடைந்து இடையறு மகிழ்ச்சியுற்றுவாழ்

வர். பின் மேருமலையை யடைந்து குருகண்டத்தைத்தி ட்டிப் பூலோகத்தின்கண் வந்து பிறப்பர். பசு[illegible], களை வேற்றுமையின்றித் தன்புருவனென்னும் மழைக்காலத்திலே மலைச்சாரல் வனங்களிலும், வேனிற்காலத்திலே சோலைகளி லும், பனிக்காலத்திலே வெயில்வெளியிலும் மேய்த்தல்வே ண்டும். ஆகமநூலிற் கூறிய வாறே பசுக்களைப் பாதுகா வாதவனை அரசன் தண்டமுறுத்தல்வேண்டும். அங்ஙனம் அவ்வரசன் செய்வானாயிற் சிவலோகத்தை யடைவன். செ ய்யானாயின் நரகத்தில் வீழ்ந்து வருந்துவன். பசுக்களைப் பாதுகாவாதவர்களும், மலர்கொண்டு அருச்சியாதவர்களும், அவைகள் நோயுற்றவழி விளாத்து போய்த் தீராதவர்களு ம், " யாவருங் கொடிது கொடிது " என்று சொல்லற்குரிய எரிவாய்நரகத்திற் கெங்ஙனந் தப்புவர்? பசுக்கள் தினவுற்று ழி யுரோஞ்சற்பொருட்டு மந்தைமுதலிய விடங்களில் ஆவுரி ஞ்சுகல் நட்டவர்களும், சிவபெருமானுக்கும் தமதாசானுக் கும் பசுவைத் தானஞ்செய்தவர்களும், தாம் முற்பிறப்பிற் பெற்ற தீவினை விலங்கற்றுச் சிவலோகபதவிசேர்ந்து பதினு யிரம் பிரமகற்பம் அங்குள்ள திவ்ய போகங்களை யநுபவித்து வாழ்வர். சிவபெருமானது சந்நிதியில் இடபதானஞ்செய்த வர் அவ்விடபத்திற் பொருந்திய உரோமங்களில் ஒவ்வொன் றுக்கு ஆயிரந் தேவவருடமாகப் பெற்றுச் சிவலோகத்தில் எண்ணில் காலம் இன்புற்று வாழ்வர். அன்றியுஞ் சந்நி

யம் பெருக்கமுறும். முப்புரமெரித்த முக்கண்ணனாகிய சிவ பெரு[illegible]ழூர்ந்தருளும் வாகனமாகிய இடபத்திலேறிச் செல்லலும் மலட்டுப்பசுவிலாதல் இடபத்திலாதல் பாரமேற்றிச் செலுத்துதலும் ஆகாவாம். அவ்வாறு செய்பவனையரசன் தண்டித்தல் கடன். தண்டியானாயின் நரகஞ் சோவன். யாவராயினும் இடபத்திற் பாரமேற்றுவாராயின் அப்பாவநீங்கும்பொருட்டுச் சிவபெருமானுக்கு வலிமைபொருந்திய பதினொரு வெண்ணிற இடபத்தைத் தானஞ்செய்து பசுநிரையை ஒரு வருடம் மேய்த்தல்வேண்டும். சிவபெருமானது ஆலயப் பணிக்குச் சகடமிழுத்தற்பொருட்டு இடபமுதவலும், நோயினாலாயினும், ஆகாரமின்மையினாலாயினும் மெலிவுற்ற பசுக்களை வாங்கி வளர்த்தலும் பெரும் புண்ணியமேயாம். பசுக்கன்று பிறந்து இரண்டு மாசம் வரையிலும் அது பருகும்படி பாலை விட்டுவிட்டுப் பின் கறந்து கடவுளுக்கு அபிஷேகம்பண்ணவேண்டும். கன்று வயிறாரப் பால் குடித்ததின்பின் மடிவிலுள்ள நுனையைச் சலத்தாற் கழுவிப் பால்கறந்து கடவுளுக்கு உதவவேண்டும். தமதூண் பெருக நினைத்துக் கன்றூண் சிறுக அதற்குப் பால் விடாது ஆசைப்பெருக்கத்தினால் வற்றக் கறப்போர் எண்ணில்லாத காலம் எரிவாய்நரகத்தில் வீழ்ந்து வருந்திப் பின்னர்ப் பூமியிலே பிறந்து தமக்கு உணவின்றி வீடுகடோறும் அலைந்து திரிந்து பிச்சையேற்றுண்டு என்செய்தோம்! என்

செய்தோம்! என்று நினைந்து நினைந்து உழல்வர். சாலிய நித்தையுடைய நந்தையென்றும் பசுவின் பாலைக் கன்றுக்குதவலாமேயன்றித் தமது உணவின்பொருட்டு உபயோகிக்கலாகாது. உபயோகிக்கின் நரகத்தில் வீழ்ந்து துன்புறுவர். புலையர்கள் ஆன்கொட்டிலிற் போகலாகாது. போவராயின் அநேககோடிகாலம் நரகத்தில் ஆழ்ந்து அதினின்றுங் கரையேறாது அல்லலை யதிகமாயடைவர். இதற்குப் பிராயச்சித்தமில்லை.

ஆதலின் இன்னோரன்ன பெருமையினையுடைத்தாய பசுக்களையும் இடபங்களையும் யாவரும் அன்புமுறையானே யோம்பி யெவ்வாறும் எளிதிற் கிடைத்தற்கரிய சிவலோகத்தை யடைந்து எண்ணில்லாத காலம் இறுதியிலா வானந்தம் பெற்றுய்யக் கடவர்கள்.

முற்றிற்று.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவடி வாழ்க

